# தந்தை பெரியாரே எழுதிய சுயசரிதை

தந்தை பெரியார்

**திராவிடர் கழக வெளியீடு**
50, ஈ.வெ.கி. சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை –600 007.

RangaRakes tamilnavarasam.com

முதல் பதிப்பு – 1993
**பெரியார்** - மின் நூல் தொகுப்புத் திட்டம் - 2007

இலவச வெளியீடு

வழங்குவோர்:
**திராவிடர் கழகம்**
பெரியார் திடல், 50, ஈ.வெ.கி. சம்பத் சாலை,
வேப்பேரி, சென்னை –600 007.

**அச்சுக் கோப்பு :**
**பெரியார் கணினி ஆய்வுக் கல்வியகம்**
பெரியார் திடல், 50, ஈ.வெ.கி. சம்பத் சாலை,
வேப்பேரி, சென்னை –600 007.

RangaRakes tamilnavarasam.com

# ஈ.வெ.ரா.வுக்குத் தோன்றியது....

எனக்கு, 'ஏதாவது எழுதலாமா' என்ற உணர்ச்சி வந்தது. உடனே, 'என்ன எழுதலாம்?' என்று யோசித்தேன். காகிதம், பேனா எடுத்து எழுத ஆரம்பித்தேன். "ஏன் காங்கிரசிலிருந்து விலகினேன்?" என்பதுபற்றி எழுதத் தோன்றிற்று.

"ஏன் காங்கிரசிலிருந்து விலகினேன்?" என்று எழுதுகின்ற நான், 'நான், ஏன் காங்கிரசில் சேர்ந்தேன்?' என்பதைத் தெரிவிக்கவேண்டியது அவசியமாகும். அதற்குமுன், எனது சரித்திரத்தையும் ஒரு சிறிது எடுத்துக்காட்டுவது அவசியமாகும்.

நான் 1879–இல் பிறந்தவன். 1887 வரையில், நான் ஒரு வீட்டுக்கு – குழந்தைப் பருவத்திலேயே – சுவீகாரமாய், வாய்ப் பேச்சில் கொடுக்கப்பட்டு, அங்கு வளர்ந்து வந்தவன். காரணம் என்னவென்றால், என் தமையனார் பெரியவர்; அவர் காயலாக் குழந்தை; தபசு செய்து வரம் இருந்து பெற்ற பிள்ளை; அதைக் காப்பாற்ற, என்னைக் கொடுத்துவிட்டார்கள். என்னை சுவீகாரம் பெற்றவள், என் தகப்பனாருக்கு – சிறிய தகப்பனார் மனைவி; சிறிது பூமியும், ஒரு வீடும், கொஞ்சம் பணமும் உடையவள்; அன்றியும், அவள் ஒரு விதவை. அந்த அம்மாள் என்னை வெகு செல்லமாய் வளர்த்து வந்தாள்.

நான், சிறிது 'சுறுசுறுப்பான சுபாவமுள்ள' சிறுவன்; அதோடு வேடிக்கையாக, மற்றவர்கள் சிரிக்கும்படி பேசுகிறவன். மற்றவர்கள், சிரிக்கும்படி பேசுவது இரண்டு விதம். ஒன்று பேச்சில் வேடிக்கை, அதிசயக் கருத்து இருந்து சிரிக்கப்படுவது ஒருவிதம்; மற்றொன்று, மானாவமானமில்லாமல் சங்கதிகளை கீழ்த்தரத்தில் பேசுவதில் சிரிக்க நேருவது மற்றொரு விதம். நான்அதிகமாக, வேடிக்கைக் குறும்புத்தனமாய் சங்கதி பேசுவது வழக்கம். ஆதலால், அது இரண்டாம்



RangaRakes tamilnavarasam.com

தரத்தைச் சேர்ந்தது. வெகு தாராளமாக, கொச்சையாக சங்கதிகளை, பச்சையாகப் பிரயோகம் செய்யும் பழக்கம் என்னிடம் உண்டு. இதை ரசிக்கிறவர்களே கூட்டமாக என் சுவீகார வீட்டில் காணப்படுவார்கள். சுவீகாரத் தாய் என்னை அடக்கினாலும், மற்றவர்கள், 'சிறு குழந்தைகள், அப்படித்தான் இருக்கும்; அடிக்காதே' என்பார்கள். நான் செல்லமாக வளர்க்கப்படுகிறேன். ஆதலால், அதிகமாக அடிக்கமாட்டார்கள். என்னைப் பார்க்க என் தகப்பனார் அடிக்கடி வீட்டிற்கு வருவார். அவரிடம் இதைச் சொல்லுவார்கள். அவருக்கு கோபமும்,சிரிப்பும் வரும். ஏனென்றால், என் பேச்சு ஆபாசமாயிருந்தாலும், அதில் சிறிது அதிசயம், அர்த்தபுஷ்டி என்பதும் இருக்குமாம். அதனால், உள்ளே சிரித்துக்கொண்டே என்னைக் கண்டித்துவிட்டுப் போய்விடுவார். இந்த நிலையில் என்னை படிக்கப் போட்ட பள்ளிக்கூடம், ஒரு ஓலைச்சாலைக் குடிசு. 16 அடி நீளம், 8 அடி அகலம் இருக்கும். அதில் சுமார் 50 பிள்ளைகள் படிப்பார்கள். 5 வயது முதல் 13 வயதுவரை வயதுள்ளவர்கள். வீட்டில் காலித்தனம், தெருவில் வம்பளப்பு – கலகம், பள்ளியில் சுட்டித்தனம், வளர்ப்பில் செல்லம் (செல்வம்) இவைகளால் நான் கற்றது, வாயாடித் தனம்தான் என்று சொல்வார்கள். இந்த வாயாடித்தனம், வெட்கமில்லாமல் – பயம் இல்லாமல் – செல்ல வழி கிடைத்துவிட்டால், அது எங்கு போய் நிற்கும் . . . ? சொல்ல வேண்டுமா. . . ? என் தமையனார் நல்ல வளப்பம் பெற்று, உடல் நலம் அடைந்த உடன் என் தாயார் பிடிவாதத்தால், என் சுவீகாரம் ரத்தாக்கப்பட்டு, நான், தகப்பனார் வீட்டிற்கே அழைத்துக்கொள்ளப்பட்டு – அங்கு சென்றதும் இரண்டொரு வருடம் முனிசிபல் ஆரம்பப் பள்ளியில் படிக்க வைக்கப்பட்டு – அங்கும் வாத்தியாரால் என்னை வைத்து சமாளிக்க முடியாமல் – நாலாவது வகுப்பு 'ப்ரைமரி பரீக்ஷை' அதாவது, ஒரு ரூபாய் பணம் கட்டி, அம்மை குத்திக்கொண்டு பரீட்சை எழுதுவது, பெரிதும் சிலேட்டிலேயே, பரீட்சை எழுதிக் காட்டவேண்டும். இந்த பரீட்சை பாசானால் கணக்கு மணியம், அட்டெண்டர் முதலிய வேலைக்குப் போகலாம். நான் திண்ணைப் பள்ளிக்கூடத்தில்



RangaRakes tamilnavarasam.com

படித்ததால் அங்கு எனக்கு செவுடிப் (தமிழ்க் கணக்கு) பாடமிருந்தாலும் முனிசிபாலிடி பள்ளியில் 4–வது பரீட்சை பாசாகி (என் பேர், செயிண்ட் ஜார்ஜ் கெஜட்டில் வந்து) விட்டதாலும், வாத்தியாருக்கு என்னைப் பள்ளியில் வைத்து சமாளிக்க முடியாமற் போனதாலும், என் தகப்பனாருக்கு, என்னை மேலும் படிக்க வைக்க முடியாமல், 'இதுவே போதும்' என்று கருதி எனது 10 அல்லது 11–வது வயதில் பள்ளியை நிறுத்தி, தன் மண்டிக் கடைக்கு – மூட்டைகளுக்கு விலாசம் போடவும், வண்டிச் சரக்குகளுக்கு விலை ஏலம் கூறவுமான வேலையில் போட்டுவிட்டார்கள். எங்கள் கடைக்கு, அந்தக் காலத்தில் "குறைந்தது தினம் 50 வண்டி சரக்குகளுக்குக் குறையாமல் 100 வண்டி வரையில் மஞ்சள், மிளகாய், தானியப்பயிர் வகைகள், எண்ணெய், கைராட்டை நூல், வெல்லம், கருப்புக்கட்டி (பனை வெல்லம்) முதலியவைகள் வரும். இந்த வண்டிகளுக்கு வண்டிக்கு இரண்டு பேருக்குக் குறையாமல் வருவார்கள். வியாபாரத்திற்கு, வாங்குவதற்கும் பலர் வருவார்கள். எனக்கு இந்த வெளியூரிலிருந்து வருகிறவர்களிடம் பேசுவதும், அவர்களுக்கு வேண்டிய சில்லரைச் சவுகரியம் செய்து கொடுப்பதும் எனது வேலையாக இருந்தது. 'நான் மண்டி முதலாளி மகன்' ஆகிவிட்டதால், என்னிடம் அவர்களுக்கு ஒரு பற்றுதல் ஏற்படுவது இயற்கை; ஆதலால், நேரப்போக்காகவும் இருந்ததால் அங்கும் பேச்சு வளர்ச்சியடைய ஆரம்பித்துவிட்டது. இந்தப் பேச்சு வளர்ச்சியடைய, அடைய, தர்க்கவாதமும் கூடவே வளர்ச்சியடைய ஆரம்பித்துவிட்டது. 'இயற்கை வாயாடிக்கு சிறிது சட்ட ஞானமும் இருந்தால், அவன்தான் கெட்டிக்கார வக்கீல்' என்று சொல்லப்படுவது வழக்கம். அதிலும், கொஞ்சம் பகுத்தறிவு உணர்ச்சியிருந்தால், உண்மையிலேயே கெட்டிக்காரனாவான். யோக்கியமானவனா, அயோக்கியமானவனா என்பது வேறு விஷயம்; அவன் நிச்சயமாக கெட்டிக்காரப் பேச்சாளியாவான். எனக்கு, எப்படியோ பேசுவதில் ஆசை ஏற்பட்டு, இந்தப்படி கெட்டிக்காரப் பேச்சாளியாக நான் ஆகவேண்டுமென்பதற்காக, 'வேண்டுமென்றே' குயுக்தி, தர்க்கம், மனதறிந்து எதிர்ப்பு பேசுவது இந்த மாதிரியாக பேச ஆரம்பித்து, பிறகு



RangaRakes tamilnavarasam.com

இப்படிப் பேசுவது என்பது எனக்குச் சுபாவமாக ஆகிவிட்டது. எங்கள் கடையில் நான் இப்படிப் பேசுவது தவிர, எங்கள் வீடு அந்தக் காலத்தில் அதாவது 1890–இல் சிறிது பணக்கார வீடு என்று ஆகி இருந்ததால், வைணவ மத விஸ்வாசமுள்ள பாகவதர் வீடாகவும் இருந்ததால், கோயில், உற்சவம் முதலியவைகளில் சிறிது சிரத்தை எடுத்து செலவு செய்யும் வீடாகவும் இருந்ததால், சதா சந்நியாசிகள், மத பக்தர்கள், பாகவதர்கள், புராணீகர்கள், வித்வான்கள், சொந்தமாக வந்து பயன்பெற்றுப்போகவும், 4 நாள், 8 நாள் தங்கிப் போகவுமான வீடாகவும் ஆகிவிட்டதால், இவர்களிடமும் வம்பளத்தல், தர்க்கம் பேசுதல் ஆகிய வசதி அதிகமாகிவிட்டது. எனவே, கடையில் கிராமத்தாரிடமும், சந்தை வியாபாரிகளிடமும் பேசுவது மாத்திரமல்லாமல், வீட்டில் மத பக்தர்கள், வித்வான்களிடமும் பேசுவதுமாக நேரிட்டுவிட்டதால் பின்கண்ட இவர்களிடம் பேசுவது மத எதிர்ப்பு, சாஸ்திர எதிர்ப்பு, புராண எதிர்ப்பு, கடவுள் எதிர்ப்பு என்கிற அளவுக்குப் போய்விட்டது. இதுவே, என்னை – சாதி, மதம், கடவுள் என்கின்ற விஷயங்களில் நல்ல முடிவு ஏற்படும்படி செய்துவிட்டது. இதன் காரணமாக எனக்குப் பார்ப்பனீயத்தில் ஒரு வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. பார்ப்பனர் உயர் வாழ்வில் எனக்கொரு பொறாமையும் ஏற்பட்டுவிட்டது; என்றாலும், பார்ப்பனருடன் நெருங்கிப் பழகுவதில் சிறிதும் எனக்கு அசவுகர்யமோ, பார்ப்பனர் என்னைப்பற்றி தவறாக நினைக்கும் தன்மையோ ஏற்பட்டதில்லை என்றே சொல்வேன். சாதாரணமாக எனக்கு 1900 – த்திலேயே 'பார்ப்பனர் – தமிழர்' என்ற உணர்ச்சியுண்டு. பேசும்போது, இந்தப் பிரிவு எனக்கு அடிக்கடி ஏற்படும்; என்றாலும், நான் பார்ப்பனருக்கு நல்ல பிள்ளையாகவே இருந்தேன். என் தகப்பனார், பார்ப்பனருக்கு ரொம்பவும் தர்மம் செய்வார்; அடிக்கடி சமாராதனை செய்வார். இது எனக்கு வருத்தமாக இருக்குமென்றாலும், பார்ப்பனர்கள் நான் பேசுவதைக் குற்றமாக எண்ணமாட்டார்கள்.

ஒரு தடவை, எங்கள் ஊருக்கு நெரிஞ்சிப்பேட்டை சாமியார் (சங்கராச்சாரி போன்றவர்) வந்தார். அது 1902–ஆம் வருஷமாய் இருக்கலாம்; அவருக்கு, எங்கள் ஊர் நகரத்து செட்டியார் வகுப்பு

www.periyar.org.in



RangaRakes tamilnavarasam.com

வியாபாரிகள் தடபுடலாய் பிக்ஷை (பிட்சை) நடத்துகிறார்கள். எங்கள் தகப்பனாரும் 50 ரூபா கொடுத்தார். பெரிய சமாராதனை நடக்கிறது. அந்தச் சாமியார் தம்பி ஒரு மைனர்; கடன்காரன்; அவனும் கூட வந்திருந்தான். அவன், ஈரோட்டில் ஒரு வியாபாரிக்கு கடன் கொடுக்கவேண்டும்; அது கோர்ட்டில் டிக்ரி ஆகி இருந்தது. அந்த சமயம், அந்த வியாபாரி அக்கடனை வசூல் செய்ய, என்னை யோசனை கேட்டார். நான் அவசரமாய் 'படிபோட்டு, வாரண்டு கொண்டு வா' என்று சொன்னேன். உடனே, நிறைவேற்ற விண்ணப்பம் போட்டு அன்றே, வாரண்டு வந்தது. மறுநாள், பகல் 12 மணிக்கு வாரண்டு எடுத்துக்கொண்டு சேவகனுடன் அந்த வியாபாரி என்னிடம் வந்தார். நான் அவர்களைக் கூட்டிக் கொண்டு, ஈரோட்டில் சாமியார் இறங்கியிருந்த "எல்லைய்யர் சத்திரம்" என்கின்ற இடத்துக்குப் போனேன். உள்ளே, சுமார் 200 பேர்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். சத்திரத்திற்குப் பக்கத்தில், வெளியில், நான் நின்று கொண்டு, சாமியார் தம்பிக்கு நான் ஆள் அனுப்பினேன்; உள்ளே இருந்து, அவர் ரோட்டுக்கு வந்தார். சேவகனுக்கு கைகாட்டி, 'இவர்தான்' என்று சொன்னேன். சாமியார் தம்பி, 'வாரண்டு என்று தெரிந்ததும், ஓடினார். நான் கூடவே கையைப் பிடித்துக்கொண்டு, இழுத்துக்கொண்டே போனேன்; திமிரிவிட்டு – 'சட்'டென்று வீட்டுக்குள் புகுந்து, வெளிக்கதவைத் தாளிட்டுக் கொண்டான். நான் உடனே தூணைப் பிடித்து, தாழ்வாரத்தின்மீது ஏறி, ஓடுகள் உடைய ஓடி, புறக்கடைப்பக்கம் வீட்டிற்குள் குதித்து – சாப்பாடு இருக்கும் இடத்தையும், பார்ப்பனர் சாப்பிடும் பந்தியையும் தாண்டிவந்து, வீதிக் கதவைத் திறந்துவிட்டு, சாயபு சேவகனைக் கூப்பிட்டு ஒரு அறைக்குள் ஒளிந்துகொண்ட, சாமியாரின் தம்பி கையைப் பிடித்து ஒப்புவித்தேன். அவன் திமிரினான்; என் கடை ஆட்கள் நாலைந்து பேர்கள் அங்கிருந்தவர்களை – 'இவனைப் பிடித்து, வெளியில் தூக்கிக்கொண்டு போங்கள்' என்று சொன்னேன்; தூக்கிவந்துவிட்டார்கள். கூட்டம் சேர்ந்துவிட்டது. சாப்பிட்டுக்கொண்டிருந்த பார்ப்பனர்கள் சுமார் 200 பேர்கள், அரைச் சாப்பாட்டோடு இலையை விட்டெழுந்து



RangaRakes tamilnavarasam.com

கைகழுவிக்கொண்டார்கள். ஆளைப் பிடித்து ஒப்புவித்துவிட்டு நான் நேரே வீட்டிற்கு சாப்பாட்டுக்குப் போய்விட்டேன். சாமியார் கோஷ்டி போலீசில் பிராது எழுதி வைத்துவிட்டு, டெபுடி கலெக்டரிடம் பிராது கொடுக்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார் என்பதாக எனக்குத் தெரியவந்தது, பிட்க்ஷை நடத்துபவர்கள் வியாபாரிகள்; என் தகப்பனாரும் 50 ரூபா, கொடுத்திருக்கிறார்; ஈரோடு நகரத்துச் செட்டிமார் பெரிதும் என் தகப்பனாரிடம் லேவாதேவி செய்பவர்கள்; சினேக முறையில் பழகுபவர்கள்; ஈரோடு வக்கீல்களும், பிராமணர்களும் என் தகப்பனாரிடம் தாக்ஷண்ய மனோபாவமுடையவர்கள்; 'என்ன நடக்கிறது, என்று பார்க்கலாம்' என்றே கலக்கத்துடன், சாப்பிட்டுவிட்டு கடைக்கு வந்தேன். கடை வீதியில், வழிநெடுக. இதைப்பற்றி பெரிய பிரஸ்தாபம். கடையில் வந்து நான் உட்கார்ந்த உடன் "நீ அந்தப் பார்ப்பானைப் பிடித்துக் கொடுத்தது சரி. ஆனால், அந்த பிராமண சமாராதனையைக் கெடுத்து விட்டாயே, அதைப்பற்றிதான் உன்மீது எல்லோருக்கும் வெறுப்பேற்பட்டு விட்டது" என்று என்னிடம் வந்து பலர் சொன்னார்கள். "நல்லவேலை செய்தாய்; எப்படியும் அந்தப் பார்ப்பானைப் பிடித்தே தீர்த்தாயே. அவன் எத்தனை பேர்களை ஏமாற்றிக்கொண்டு வாங்கின கடன் கொடுக்காமல் திரிகிறான்" என்று சிலர் சொன்னார்கள். நான் அப்போதுதான் "நாம் கண்ணால் பார்த்தால், சமாராதனை எப்படிக் கெட்டுப்போகும்; இந்தப் பார்ப்பான்கள் அங்கு வந்து சாப்பிட்டது தண்டசோறு; நாம் கொடுத்த பணம்; நான் ஒன்றையும் தொட்டுவிடவும் இல்லை; இப்படி இருக்க சமாராதனை எப்படிக் கெடும்? . . . . . கெட்டால்தான் கெடட்டுமே, என்ன முழுகிப் போய்விட்டது? பார்க்கலாமே!" என்று ஒரு மாதிரி திடப்படுத்திக் கொண்டு கடைவேலை பார்த்துக்கொண்டும்., வருகிறவர்கள் போகிறவர்களிடம் இதைப் பற்றிப் பேசிக்கொண்டும் இருந்தேன். என் தகப்பனாருக்கு, இதைப்பற்றி ஒன்றும் தெரியாது. அவர் பிற்பகல் 3 அல்லது 4 மணி சுமாருக்கு வீட்டிலிருந்து கடைக்கு வந்தார். வந்து சிறிது நேரம் ஆனவுடன் ஒரு கூட்டம் சுமார் இருபது பேர்கள் கடைக்கு வந்தார்கள். அவர்கள் பெரிதும் நகரத்துச் செட்டியார் வகை; பெரிய



RangaRakes tamilnavarasam.com

ஆள்கள்; வக்கீல் குமாஸ்தா; பார்ப்பனப் பிள்ளைகள் – 2, 3 பேர், சாமியாருடைய அதிகாரி ஒருவர், இப்படியாக வந்தார்கள். இவர்கள் வந்த உடன் என் தகப்பனார் மறுபடியும் சாமியார் விஷயத்திற்கு ஏதாவது வசூலுக்கு வந்திருக்கிறார்களோ என்னமோ என்று நினைத்துக்கொண்டு மேலும் ஏதாவது கொடுக்கவே முடிவு செய்துகொண்டு சாமியார் ‘‘பிட்க்ஷை (சமாராதனை, ஊர்கோலம்) பற்றி ‘நன்றாய் நடந்ததா?’ என்பதுபற்றி சிரித்த முகத்துடன் விசாரித்தார். வந்தவரில் பெரிய வர்த்தகச் செட்டியார் ஒருவர் – ‘‘அந்தக் கண்றாவியை ஏன் கேட்கிறீர்கள். அங்கு வந்து பாருங்கள், 200 – 300 பேர் பட்டினி. இனிமேல்தான், சமையல் நடக்கவேண்டும். ஆச்சார்ய சாமிகளுக்கு மிகமிக மனவேதனை’’ என்று சொல்லிக்கொண்டு வரும்போதே ஒருவர், ‘எல்லாம் பாழாய்விட்ட’தென்றும், மற்றொருவர், ‘ இந்த அக்கிரமம், இதுவரை எங்கும் நடந்திருக்காது’ என்றும், என்ன என்னமோ என்னைப் பார்த்துக்கொண்டே பேசுகிறார்கள். நான் கடைக்கு உள் உட்கார்ந்திருந்தவன், வெளியில் வந்து, தாழ்வாரத்தின் சுவற்றுடன் சாய்ந்து நின்றுகொண்டேன். என் தகப்பனாருக்கு, ஒன்றும் புரியவில்லை. சங்கடமான வருத்தக் குறியுடன் முகத்தைச் செய்துகொண்டு ‘என்ன சங்கதி?’ என்று ஆச்சரிய பாவத்துடன் கேட்டார். ‘‘ சங்கதி என்ன, எல்லாம் உங்கள் மகன் நம்ம ராமுவால்தான்’’ என்று செட்டியார் பதில் சொன்னார். ‘‘எங்க ராமனாலா? அவன் என்ன, இந்த காரியத்தில் சம்மந்தம்?’ என்று மனவருத்தத்துடனும், ஆத்திரத்துடனும் கேட்டார், என் தகப்பனார். ‘‘அந்த அநியாயத்தை ஏன் கேட்கிறீர்கள்? அங்கு வந்துபாருங்கள், சாப்பாடு பண்டங்கள் நாசமாய்க் கிடப்பதை, மலையாட்டம் கெட்டுப்போன பண்டம் குவிந்துகிடக்கிறது’’ என்றார் வக்கீல் குமாஸ்தா பார்ப்பனர்; ‘‘என்ன சங்கதி, எனக்குப் புரியவில்லை. சொல்லுங்கள் தெரியும் படியாக’’ என்று அவசரமாகக் கேட்டார் என் தகப்பனார். ‘‘சமாராதனை நடந்துகொண்டிருக்கும்போது, உங்க ராமு வீட்டின்மீது ஏறி புறக்கடைப் பக்கம் குதித்து, பந்தி நடந்த பக்கம் வந்து வெளிக்கதவைத் திறந்து துலுக்கனையெல்லாம் கூட்டி வந்து உள்ளே



RangaRakes tamilnavarasam.com

விட்டு விட்டான்; பிராமணாள் 200, 300 பேர் சாப்பிடச் சாப்பிட இந்த அக்கிரமம் நடந்ததால், அவர்கள் அத்தனை பேரும் எழுந்துவிட்டார்கள். பின்புறம் செய்து வைத்திருந்த சாப்பாடு, கறி, குழம்பு, பதார்த்தம் எல்லாம் நாசமாய்விட்டது'' என்றார் மற்றொரு வக்கீல் குமாஸ்தா பார்ப்பனர்; `` சொல்லுங்கள் சாமி, நன்றாய் நாய்க்கருக்கு விளங்கும்படி சொல்லுங்கள்'' என்றார் மற்றொரு செட்டியார்; என் தகப்பனார் மகா ஆத்திரத்துடன் ``என்னடா ராமா என்ன நடந்ததுடா? அங்கென்னத்துக்கு நீ போனாய்? என்ன சங்கதி சொல்லு . . . .'' என்று ஆவேசம் தாண்டவமாட, அதிகார தோரணையில் கேட்டார். நான் ``ஒன்றும் இல்லையப்பா; இந்த சாமியார் தம்பியை வாரண்டு சேவகன் வாரண்டில் பிடித்துவிட்டான்; பிறகு, கையெழுத்துப் போடாமல் தப்பி ஓடி எல்லைய்யர் சத்திரத்திற்குள்ளே போய் புகுந்து கதவைத் தாளிட்டுக் கொண்டார்; நான் `சட்' டென்று ஓட்டுமேல் ஏறி குதித்து கதவைத் திறந்து விட்டேன். பிறகு சேவகன் வந்து பிடித்துக்கொண்டு போய்விட்டான். அதனால், இவர்கள் சமாராதனை கெட்டுப் போய்விட்டதாம்'' என்றேன். என் தகப்பனாருக்கு ஏற்பட்ட கோபத்துக்கும், ஆத்திரத்துக்கும் அளவே இல்லை! ``அடத் தேவடியாள் மகனே, உனக்கென்ன அங்கு வேலை? வாரண்டுக்காரனிடமிருந்து ஓடிவிட்டால், சேவகன் என்னமோ பார்த்துக்கொள்ளுகிறான். நீ ஏன் சுவர் எட்டிக் குதித்து உள்ளே போனாய்?'' என்றார். இதற்கு மத்தியில் ``அது மாத்திரமில்லிங்கோ நாய்க்கர்வாள்; பிராம்மணர் வரிசையாக பந்தியில் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு மத்தியில் இலைகளை மிதித்துக்கொண்டு ஓடி கதவைத் திறந்துவிட்டு ஒரு நூறு பேருக்கு மேல் துலுக்கன், மலுக்கன், கண்டவன், நின்றவன், தெருவில் போனவன், எவனெவனோ வந்து உள்ளே புகுந்து அத்தனையையும் தோஷமாக்கி வெளியில் வாரிக்கொட்டப்பட்டது. இன்னமும் இப்ப மணி 4 ஆகியும் அத்தனை பிராம்மணாளும் பட்டினியாய் இருக்கிறார்கள். என் மனம் பதறுதுங்கோ'' என்று சொன்னார்.

www.periyar.org.in



RangaRakes tamilnavarasam.com

“ஆமாங்காணும், உங்கப்பன் வீட்டுச் சாப்பாடு நாசமாய்ப் போய் விட்டதாக்கும்; மிகப் பாடுபட்டு உழைத்த பிராமணாள் பட்டினி கிடக்கிறாங்களாக்கும். வாங்கின கடனை மோசம் பண்ணி, கடங்காரனை ஏமாத்திவிட்டு, வாரண்டு சேவகனிடமிருந்து தப்பிக்கொண்டு திருட்டுப் பயலாட்டம் ஓடிவிடுகிறது; சமாராதனையில் போய் ஒளிந்துகொள்வது; கதவைத் தாள் போட்டுக் கொள்வது; இதெல்லாம் மிக நியாயமான சங்கதி . . . நான் கதவைத் திறந்ததால் . . . . உலகம் முழுகிப்போய்விட்டது. இந்தப் பிராமணாள் பட்டினி கிடந்தால் உலகமே இருண்டு போகுமாக்கும். ஏகாதசி என்று நினைத்துக் கொள்ளட்டுமே . . . வந்துவிட்டார்கள் . . . வெட்கமில்லாமல், பிராது சொல்ல” என்று நானும் ஆத்திரமாகக் கேட்டேன். உடனே என் தகப்பனார் எழுந்தார். “இரங்கேசா . . . . எனக்கு இப்படிப்பட்ட பிள்ளையையா நீ கொடுக்க வேணும் . . . ? நான் முன் ஜென்மத்தில் என்ன பாவம் பண்ணினேன்” என்று மார்மாராக, பெண்களைப் போல் ஓங்கி ஓங்கி அடித்துக்கொண்டார். “என்ன முழுகிப்போய்விட்டது? அந்தத் திருட்டுப் பார்ப்பான் பண்ணின தைப்பற்றி சிந்திக்க மாட்டேன் என்கிறீர்கள். இவர்கள் கொழுத்துப் போய் சோற்றை எடுத்துத் தெருவில் கொட்டிவிட்டால், அதற்கு யார் என்ன பண்ணுவார்கள்? இன்னமும் பணம் அடிக்கலாம் என்று இந்தப் பார்ப்பான்கள், இந்தச் செட்டியார்களைக் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறார்கள்” என்றேன், அதற்குள் வக்கீல் குமாஸ்தா பார்ப்பனர் “ நான் அப்போதே சொல்ல வில்லையா? . . . கலெக்டரிடம் பிராது கொடுத்துவிடுங்கள் என்று” என்று சொன்னார். என் தகப்பனாருக்கு நான் சொன்ன பதில் மேலும் ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டது. “சாமி நீங்க சும்மா இருங்க” என்று சொல்லிக்கொண்டு, குனிந்து பக்கத்தில் இருந்த அவரது செருப்புகளில் ஒன்றை எடுத்துக்கொண்டு, என்மீது வெத்திலை பாக்கு எச்சிலைத் துப்பி, என் குடுமியை பலமாய்ப் பிடித்துக்கொண்டு தலை – முகம் – முதுகு – என்று ஒன்றும் பார்க்காமல் 7, 8 அடி – வாயில் வந்தபடி வைதுகொண்டு, பலமாக அடித்தார். செட்டியார்மார்கள் எல்லோரும்



RangaRakes tamilnavarasam.com

எழுந்து 'அண்ணா, அண்ணா, விட்டுவிடுங்கள்..... அவனுக்கு இன்னமும் சரியாப் புத்தி வரவில்லை; நாளாவட்டத்தில் வந்துவிடும்; அடிக்காதீர்கள்'' என்று மத்தியில் புகுந்து அடிப்பதைத் தடுத்து நிறுத்தினார்கள். தகப்பனாருக்கு கோபம் தணியவில்லை; நானும் அடிக்குப் பயந்து, குனிந்து கொடுக்காமல் – இந்தப் பார்ப்பனர்களை முறைத்துப் பார்த்த வண்ணமே – நின்று கொண்டிருந்தேன். என் தகப்பனார் செருப்பைக் கீழே போட்டுவிட்டு, கையைக் கழுவிக் கொண்டு, பெட்டிக்கு முன் உட்கார்ந்து, பெட்டியைத் திறந்து ஒரு அய்ம்பது ரூபாய் நோட்டு ஒன்றையெடுத்து பெரிய செட்டியார் கையில் கொடுக்க, எழுந்து நின்று ''நீங்க பெரிய மனது பண்ணி, என்னை மன்னித்து, இதை மறந்துவிடவேண்டும். இவன் எனக்கு மகனல்ல; சத்ரு . . . என் பெயரைக் கெடுக்கத் தோன்றியவன். ஏதோ இரண்டு ஆளைவிட்டு, நன்றாக உதைத்து, கையையோ, காலையோ ஒடித்துவிடுங்கள். நான் ஏன் என்றுகூட கேழ்பதில்லை. எனக்குப் போதும் . . . இந்தப் பிள்ளையைப் பெற்ற பெருமை. இவன் துலைய வேண்டும்; இல்லாவிட்டால் நான் துலையவேண்டும்; இனி இரண்டில் ஒன்றுதான். சரி, இனிமேல் என்ன செய்வதென்பதை நான் பார்த்துக்கொள்கிறேன்'' என்று சொல்லிக்கொண்டே, கண்களில் நீர் தாரை தாரையாக ஒழுக அவர் கையைப் பிடித்துக்கொண்டு ''நீங்கள் பெரிய மனசு பண்ணி மன்னிக்கவேண்டும்'' என்று சொல்லி 50 ரூபா நோட்டை கையில் கொடுத்தார். இரண்டொரு செட்டியார் 'பணம் வாங்க வேண்டாம்' என்று கண் ஜாடை காட்டிவிட்டு, ''நீங்கள் இதற்காக கவலைப்படாதீர்கள். தம்பியை மேலும் கோபிக்காதீர்கள்; எல்லாம் கொஞ்ச நாளில் சரியாய்ப் போய்விடும் மன வருத்தப்படாதீர்கள்'' என்று என் தகப்பனாருக்குச் சமாதானம் சொல்லி அவரை கையைப் பிடித்து உட்காரவைத்துவிட்டு, என்னைப் பார்த்து ''தம்பி இனிமேல் இந்தப் பதட்டத்தை விட்டுவிடு. உங்கய்யா பேரைக் காப்பாற்று. அய்யா எவ்வளவு மனவேதனைப் பட்டாரு, பார்த்தாயா? இதற்கா பிள்ளை பிறப்பது அவர் செய்கிற தர்ம தானத்திற்கு நீ இந்த பெயரா எடுப்பது?'' என்று எங்கய்யாவுக்கு சமாதானம் சொல்லியும், எனக்கு புத்தி



RangaRakes tamilnavarasam.com

சொல்லியும் விட்டு, ரூபாயையும் வாங்காமல் மனவருத்தத்துடன் அதாவது நாய்க்கர் மனதுக்கு இவ்வளவு சங்கடத்தை உண்டு பண்ணிவிட்டோமே என்கிற பரிதாபத்துடன் சென்றுவிட்டார்கள். அவர்கள் போன உடன் ஒரு மாதிரி மயக்கம் பிடித்தவர்போல் சாய்வு பெட்டியில் சாய்ந்து கண்ணை மூடிக்கொண்டு இருந்தார்.

நான் கல்யாணமான பையன்; ஒரு குழந்தையும் பிறந்து 5 மாதத்தில் இறந்துவிட்டது; கடை வீதியில் 'நாய்க்கர் மகன்' என்கிற பெருமையும், சற்று செல்வாக்கும் எனக்குண்டு; இந்த நிலையில் சுமார், 100, 200 பேர்களுக்கு முன்னிலையில் என்னைக் கண்டபடி திட்டி, முகத்தில் காரி வெத்திலை பாக்கு போட்ட எச்சிலைத் துப்பி, என் துணியையெல்லாம் வெத்திலை பாக்குக் கறை செய்து, செருப்பால் அடித்ததானது என் தகப்பனார் மனதை வாட்டுகிறது என்பது எனக்கு நன்றாகத் தெரிகிறது. போலீசு கச்சேரி எங்கள் கடைக்கு எதிர்த்த கட்டடம். அப்போது சப்–இன்ஸ்பெக்டர் பதவி கிடையாது. ஏட்டுதான் ஸ்டேஷன் அவுஸ் ஆபீஸர். அவர் ஒரு நாயுடு; எனக்கு ஸ்நேகிதர். அவரும் போலீஸ் ஸ்டேஷனிலிருந்து 5, 6 கான்ஸ்டெபிள்களுடன் பார்த்துக்கொண்டு இருக்கிறார். கூட்டம் போன பின்பு நான் எங்கள் கடைத் திண்ணையில் இருந்து குறுஞ்சிரிப்புடன் அவரைப் பார்த்தேன். அவரும் என்னைப்பார்த்து சிரித்துவிட்டு, எழுந்து நேரே எங்கள் கடைக்கு வந்து என் தகப்பனாரைக் கும்பிட்டு விட்டு – தெலுங்கில் "என்னங்கோ அண்ணா தங்களுக்கு இவ்வளவு கோபம் வரலாமா" என்று கேட்டுக்கொண்டே பெஞ்சின் மீது உட்கார்ந்திருந்தார். என் தகப்பனார் நிமிர்ந்து உட்கார்ந்து, "எல்லாம் கர்ம பலன், நான் என்ன செய்யட்டும்? என் மானமே போய்விட்டது இன்றைக்கு. நான் எப்படி நாளைக்கு கடைவீதியில் நடப்பேன்? இப்படிப்பட்ட பிள்ளையைப் பெத்துவிட்டு" என்றார். "ஒன்றும் முழுகிப்போய்விடவில்லை நீங்கள் இதற்காகப் பிரமாதமாய் வருத்தப்படாதீர்கள். என்னிடத்தில்கூட இந்தப் பிராது வந்தது. இரண்டு பிராமணர்கள் வந்து எழுதி வைத்தார்கள். 'இதில் நான் ஒன்றும் செய்ய முடியாது. கச்சேரியில் பிராது கொடுங்கள்'



RangaRakes tamilnavarasam.com

என்று சொல்லி அனுப்பிவிட்டேன். அந்த சாமியார் தம்பி ஒரு அயோக்கியன். அவன் வாரண்டை மீறி ஓடிப்போய் ஒரு வீட்டில் நுழைந்தது தப்பிதம்; கோர்ட்டுக்குப் போனாலும் அவன் பழைய சங்கதி. . . . அவன் ஒரு படையாச்சி பெண்ணை வைத்திருப்பது, 'சாமியார் யோக்கிதை' எல்லாம் வெளியில் வரும்; அந்த பசங்க போகமாட்டார்கள்; நீங்கள் கவலைப்படாதீர்கள்'' என்று சொன்னார். ''கோர்ட்டு கிடக்கட்டுமுங்கோ. . . . அவன் ஜெயிலுக்குப் போகட்டும், வேணும் அவனுக்கு . . . என் யோக்கியதை என்ன ஆச்சுது பாருங்கள்'' என்றார் என் தகப்பனார். நான் மிக்க தைரியத்தோடு, ''என்னப்பா கெட்டுப் போச்சுது, இன்னும் நாலடி வேண்டுமானாலும் அடித்துக் கொள்ளுங்கள். நான் என்ன திருடினேனா? முடிச்சவித்தேனா? இந்தப் பார்ப்பானுங்கோ திங்கிறதைக் கண்ணில் பார்த்தால் அந்தச் சோறெல்லாம் புழுவாய்ப் போய்விடுமா? தண்டச்சோறு தின்கிறாங்கோ; அதுவும் நாம் எல்லோரும் கொடுத்த பணம். இவன் வாரண்டை மீறி ஓடினது தப்பில்லை, நான் கதவைத் திறந்துவிட்டது தப்பு என்றால் . . . என்ன நியாயம்? நாளைக்கு எல்லோரும் இப்படித்தானே செய்வார்கள். கச்சேரிக்குத்தான் போகட்டுமே. நான் எட்டிக்குதித்துப் போனது பொதுச் சத்திரம். அந்தப் பார்ப்பான் வெகு பேருக்குக் கடன் கொடுக்கவேண்டும்; எல்லோரையும் ஏய்க்கிறான். அவனைச் சும்மா விடுவதா?. . . இதனால் சாமியாருக்கு நாம் என்ன தவறு செய்துவிட்டோம்'' என்றேன். அங்கிருந்த ஏட்டும் ''தம்பி சொல்லுறது ரொம்ப சரிதான் . . . அண்ணா நீங்க வருத்தப்படாதீங்க. தம்பியை நீங்கள் அத்தனை பேர் எதிரில் அடித்தது. . . எனக்கு ரொம்ப வருத்தமாயிட்டது. என்ன பிரமாதமான காரியம் ஏற்பட்டுவிட்டது . . . உங்களுக்கு ரொம்ப ஆத்திரம் வந்துவிட்டது. என்றாலும் நீங்கள் தகப்பன்தானே. . . அடித்தது போகட்டும்; இனி ஒன்றும் மனதில் வைக்காதீர்கள் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். என் தகப்பனார், தனக்குக் களைப்பாய் இருப்பதாகச் சொல்லிவிட்டு, வண்டியைக் கட்டச் சொல்லி, வீட்டுக்குப் போய்விட்டார். எங்கய்யா, வீட்டிற்குப் போன உடன் என்னிடம் சுமார் 40, 50 பேருக்குமேல் இதைப்பற்றிப் பேச வருவதும்,



RangaRakes tamilnavarasam.com

போவதுமாகவே இருந்தது. இதே பேச்சுதான்; 'சமாராதனை கெட்டுப் போச்சு' என்பவர்களும் 'கெட்டால் என்ன? இந்த பாடுபடும் பாட்டாளி மக்களுக்கு முழுகிப் போய்விட்டதா?'' என்பவர்களும் இப்படியாக பெரிய தர்க்கம் ஏற்பட்டு, 'நான் செய்தது சரி' என்கிற முடிவு ஏற்பட்டு, இந்த செய்கையால் கடைவீதியில் நான் ஒரு வீரனாகிவிட்டேன். ''பார்ப்பான் சாப்பிடுவதை நாம் பார்த்தால் குற்றம், தோஷம் என்று சொல்லுவது நமக்கு அவமானம் என்றும், கடை வியாபாரிகள், குமாஸ்தாக்கள், மனதில் படும்படியாக ஏற்பட்டுவிட்டது. இந்தப் பிரஸ்தாபம் ஜாதிபேதத்தைப்பற்றிய பேச்சாகி, கடைசியில் சாயபு வீட்டில் சாப்பிட்டால்தான் என்ன கெடுதி? என்று ஏற்பட்டு, அப்போது முதலே சமபந்தி சாப்பாடு – வியாபாரிகளுக்குள் – வருஷா வருஷம் சித்ரா பவுர்ணமி அன்று – என் தலைமை ஆதிக்கத்தில் நடப்பதும் எல்லா ஜாதியார் – மதத்தார் வந்து சாப்பிடுவதும் வழக்கமாகிவிட்டது. ' சாப்பிடுவதைக் கண்களால் பார்த்தால் 'குற்றம்' என்பதில் ஆரம்பித்த விவகாரம், 'சாப்பாட்டில் ஜாதி பேதம் காட்டுவது, அறியாமை' என்கிற முடிவு – உண்மையாகவே – மக்களுக்கு ஏற்படும்படி, அந்தச் சம்பவம் செய்துவிட்டது. இந்தச் சம்பவம் பிரபலப்பட்ட சந்தர்ப்பத்தில், என் கடைக்கு பராரியாய் ஒரு வாலிபன் வந்து வேலை கேட்டான். அவன் மேட்டுப்பாளையத்தில் ஒரு சாயபு கடையில் குமாஸ்தாவாக இருந்ததாகச் சொன்னான். அவனுக்கு, உடனே நான் வண்டிச் சரக்கு விலைபோடும் வேலை கொடுத்து, பிறகு கணக்கு வேலை கொடுத்தேன். சிறிது காலம் பொறுத்து அவன் கல்யாணத்தைப்பற்றி அவன் தாயார் என்னை வந்து கேட்டார்கள். 'பெண் எங்கே?' என்றேன். 'பெண்ணும் நீங்கள்தான் பார்த்துச் செய்யவேண்டும்' என்று சொன்னார்கள். உடனே நான் யோசித்தேன்; ஒரு தாலுகா சேவகம் நாயுடு வீட்டில் அவர் வைப்பாக வைத்துக்கொண்டிருந்த மனைவிக்கு ஒரு மகள் இருந்தது; என் குமாஸ்தா ஒரு வேளாள வகுப்பு, என்றாலும் இதைக் கட்டிக்கொள்ளக் கேட்டேன், சம்மதித்தார். தாலுகா சேவகன் மனைவியும் கொடுக்கச் சம்தித்தார். கலப்பு மணம் என்கிற பெயரில்



RangaRakes tamilnavarasam.com

'சதுர், பாட்டுக் கச்சேரி, பல்லக்கு, ஊர்வலம்' என்கிற தடபுடலில் அத்திருமணம் நடந்தது, காரணம், திருமணத்திற்கு கடைகளில் பணம் வசூல் செய்தேன். 'சமபந்தி சாப்பாடு' விருந்து நடந்தது; ஊர் பூராவும் கலந்துகொண்டது; இது 'ஜாதிபேதம் நீக்கல்; சமபந்தி உணவு; கலப்பு ஜாதி மணம்; மூன்றும் கூடியதால் – என் வயதொத்த முதலாளி பிள்ளைகள், குமாஸ்தாக்கள், எனது வாலிப சிநேகிதர்கள் ஆகியவர்கள் மனதில் பெரிய மாறுதல், சீர்திருத்த உணர்ச்சியை ஏற்படுத்தி, காரியத்தில் நடக்கும்படியும் செய்துவிட்டது. எப்போது என்றால், இன்றைக்கு **40, 45** வருடங்களுக்கு முன்னால் – அதுவும் பணக்கார, வைதீக குடும்பத்தில் இருக்கின்ற என்னால், என்றால், இது, உண்மையில் மிக அதிகமானதே . . . . அந்தக் காலத்துக்கு.

மேலும், அப்போது இந்த விதமே நான் மற்றும் சில காரியத்தில் வெற்றி பெற்றுக்கொண்டே வந்தேன். எப்படி என்றால் 'தாசி வகுப்பு ஆண்களுக்கு' அந்தக் காலத்தில் மிக மிகக் குறைவான மதிப்பு. ஆனால், அவர்களில் சிலரோடு நான் கைகோர்த்துக்கொண்டு திரிவேன். அந்த வகுப்பில் சில நண்பர்கள் எனக்கு உண்டு. அவர்களை, என் கூடவே இருக்கச் செய்து, வெகு சமமாய் நடத்துவதோடு – நான் விருந்துக்குச் செல்லும் எங்கள் வகுப்பார் வீடுகளில் எல்லாம்கூட அழைத்துப் போய் – பக்கத்தில் உட்காரவைத்து – சாப்பாடு போடச் செய்து சாப்பிடுவேன். எங்கள் ஜாதியார் சற்று வருத்தப்படுவார்கள். நான் கவலைப்படமாட்டேன். இப்படி, சில சாயபுமார்கள் வீட்டுக்கு, நான் என் நண்பர்களோடு விருந்துக்கு அழைத்துப் போவதும், அவர்களை அழைத்து எங்கள் பந்தியில் உட்காரவைத்து சாப்பிடச் செய்வதும் சகஜமாயிற்று.

பிறகு, ~~அதிகாரிகள் நேசம் ஏற்பட்டது. எங்கள் ஊர்,~~ அப்போதைய ரயில்வே ஸ்டேஷனில் எனக்கு வெகு செல்வாக்குண்டு; ஏன் என்றால், எங்களுக்கு அங்கு பல கட்டடங்கள் உண்டு; ரயில்வே சிப்பந்திகள் பலர் எங்கள் வீட்டில் குடியிருப்பவர்கள். ரிப்ரெஷ்மெண்ட் ரூம் மேனேஜரும்



RangaRakes tamilnavarasam.com

அங்கு எங்கள் வீட்டில் குடி இருப்பவர்; எனக்கு அவர் மைனர் ஸ்நேகமானார். ஈரோடு ஸ்டேஷன், வெள்ளைக்காரர் சாப்பிடும் டின்னர் ஸ்டேஷன்; நல்ல பெரிய அந்தஸ்து வெள்ளையருக்கு டின்னர் தயார் செய்தால் நல்ல பண்டங்கள் செய்யப்பட்டிருக்கும். அவர்கள் சாப்பிட்டுப் போனபின், ஏதாவது சாப்பிடுகிறாயா? டர்க்கி, பவுல் இருக்கிறது. “இந்த மீன் இருக்கிறது. அந்த பன்றிக் கறி இருக்கிறது” என்று சொல்லுவார்; ஏன் என்றால், நான் மதுபானம் செய்வதில்லை; என்றாலும் எனக்கு ஜாதிபேதம் இல்லை என்பது அவருக்குத் தெரியும். ஆனால், அவர் மது அருந்துவார்; என்றாலும் ரிப்ரெஷ்மெண்ட் ரூமில் தண்ணீர்கூட சாப்பிடமாட்டார்; என்றாலும், எனக்கு வழங்கச் சொல்லுவார்; என்னுடன் வரும் ஸ்நேகிதருக்கும் வழங்கச் சொல்லுவார். குறைந்த சார்ஜ் போட்டு சரிப்படுத்திக் கொள்ளுவார். இதனால், நான் அனேகரை கூட அழைத்துப் போய் அங்கு சாப்பிடும்படி செய்துவிட்டேன். இது மெல்ல மெல்ல வளர்ந்தது. ஞாயிற்றுக் கிழமையானால் டிப்டி கலெக்டர், டிப்டி சூப்ரிண்டெண்டண்ட், எக்ஸைஸ் இன்ஸ்பெக்டர் ஆகிய இந்த அதிகாரிகள் ஒரு காலத்தில் பார்ப்பனரல்லாதவர்களாகவும், உண்மையில் நாணயமும் நேர்மையும் உடையவர்களாவும், லஞ்சம் வாங்காதவர்களாகவும் இருந்தார்கள். அவர்களில் சிலர் எங்கள் வீட்டில் குடி இருப்பவர்கள்; அவர்கள் எனக்கு சிநேகமானார்கள், காரணம், ஈரோடு வக்கீல்கள் எல்லோரும் பார்ப்பனர்கள். நான் ரீடிங் ரூம், டென்னீஸ் கோர்ட் செக்கரட்டரி; அப்பொழுது எங்கள் அதாவது, இந்த அதிகாரிகளுடன் கலந்து பேசும் பேச்சு, நடத்தை ஆகியவைகளில் ‘பார்ப்பனர் – பார்ப்பனரல்லாதவர்’ என்கின்ற உணர்ச்சி ததும்பும்; சந்திக்கும்போதெல்லாம் இதை முதலில் பேசுவோம். இந்த சமயத்தில் உள்ளூரில் உள்ள பார்ப்பன வக்கீல்களும், முன்சீப்பு உள்பட பார்ப்பன சர்க்கார் சிப்பந்திகளும் எங்கும், அவர்கள் கூடினால் எங்களைப் பற்றிய பொறாமைப் பேச்சே பேசுவார்கள். இது அடிக்கடி என் காதுக்கும், அதிகாரிகள் காதுக்கும் வரும்; இதையும் பேசிக்கொள்வோம்.

இந்த உணர்ச்சியுள்ள சட்டைக்கார டாக்டர் ஒருவர், எங்களுடன்



www.periyar.org.in

RangaRakes tamilnavarasam.com

சேர்ந்தார்; அவருக்கும் எனக்கும் அதிக நேசம். நான் மாலை நேரத்தில் அங்கு போய் அவர் குடும்ப சகிதம் உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பேன். அவர் வீட்டில் ஒரு குழந்தை பிறந்த நாள்; தடபுடலாகச் செய்து, அன்றிரவு அங்கு என் செலவில் டின்னர். இந்த அதிகாரிகளையும் அழைத்தேன். கோயமுத்தூர் பிரபல வக்கீல்கள் சம்பந்த முதலியார், வேணுகோபால் பிள்ளை இவர்களும் எனக்கு ஸ்நேகிதர்கள் ஆனதால் அவர்களையும் அழைத்தேன். நாங்கள் 15 பேர் மாத்திரம், டின்னர் சாப்பிட்டோம், என்னைத் தவிர மற்றவர்கள் யாவரும் மது அருந்துவார்கள். நன்றாய் அருந்திக் கொண்டே சாப்பிட்டார்கள். நான் ஒருவன்தான் நல்ல நினைவோடு இருக்கின்றேன்; என்றாலும் எங்கள் பேச்சு முழுவதும் துவக்கத்தில் இருந்து நள்ளிரவு 2 மணிவரையில் பார்ப்பன மேலதிகாரிகள், பார்ப்பன நீதிபதிகள், தங்கள் கீழுள்ள பார்ப்பன சிப்பந்திகள் ஆகியவர்கள் செய்கிற அக்கிரமங்கள், விஷமங்கள் ஆகியவைகளைப்பற்றியே பேசினோம். அன்றுமுதல் ஒரு கூட்டு உணர்ச்சி; அது நாளுக்கு நாள் வளர்ந்தது; ஈரோட்டிற்கு முன்சீப் தமிழன் வருவதே இல்லை – வந்தாலும் அவர்கள் பார்ப்பனர்களுக்கு அடிமையாகவே இருப்பார்கள். ஏன் என்றால், முன்சீப்புகளின் மேல் அதிகாரிகள், ஜில்லா ஜட்ஜுகள் பார்ப்பனர். ஜில்லா சிரஸ்தார், பார்ப்பனர்; ஆதலால் பயப்படுவார்கள். மற்றபடி டிப்டி கலெக்டர், டிப்டி சூபரிண்டெண்டண்ட், எக்ஸைஸ் இன்ஸ்பெக்டர் இவர்களின் மேலதிகாரிகள் பெரிதும் வெள்ளையர்கள். இந்த அதிகாரிகளும் சற்று கை சுத்தமுள்ளவர்கள். ஆதலால், பயமில்லாமல் பேசுவார்கள். அப்போது ஈரோட்டில், வக்கீல்கள் எல்லாம் நான் முன் குறிப்பிட்டபடி பார்ப்பனர்கள்; ஒரு பார்ப்பனரல்லாத வக்கீல் வேண்டுமென்று, ஒருவரைப் பிடித்து வந்து, மாதம் 40, 50 கைச்செலவு செய்து ஈரோட்டில் நிலை நிறுத்தினேன். இப்படியெல்லாம் செய்வதன்மூலம் பார்ப்பனர்களுக்கு நான் எதிர்ப்பாய் இருப்பது எல்லோருக்கும் தெரிந்தாலும், பார்ப்பனர்கள் என்னிடம் சிநேகமாகவே இருந்தார்கள். ஏனெனில், என் தகப்பனார் நல்ல பார்ப்பன பக்தர் நானும், அவர்களுக்கு நல்ல பிள்ளையாக நடந்து, வேண்டிய உதவி செய்துகொண்டு



RangaRakes tamilnavarasam.com

இருந்தேன்; என் தகப்பனார் இறந்தார். நான் அவருடைய அந்தஸ்து பெற்று ‘பெரிய மனிதன்’ ஆனேன். ஊர் பெரிய தனம் பூராவும் என் கைக்கு வந்துவிட்டது; முதலாவது, நான் ஒரு ஆடம்பர மைனர். இரண்டாவது, சில காலிகளும் என் கூடவே இருப்பார்கள். மூன்றாவது, நான் ஒரு பெரிய மனிதன் மகன். நான்காவது, அதிகாரிகள் ஸ்நேகம். அய்ந்தாவது, ஊர் காரியங்கள், தகராறுகள், விவகாரங்களை நானே மேலே எடுத்துப் போட்டுக்கொண்டு பைசல் செய்வது; இவ்வளவும் இருந்தாலே ஒருவனுக்கு ஊரில் செல்வாக்கு இருக்கும். இவற்றைவிட மற்றொரு குறிப்பிடத் தகுந்த விஷயம் என்னவென்றால், அப்போது இன்கம்டாக்ஸ் டிபார்ட்மெண்ட் இல்லை. தாசில்தார், டிப்டி கலெக்டர்தான் இன்கம்டாக்ஸ் போடவேண்டும். அவர்கள் உள்ளூர் கணக்கப் பிள்ளை, மணியக்காரர், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் சொன்னபடிதான் போடுவார்கள். ஆனால், தாசில்தாரும், டிப்டி கலெக்டரும் ஊரில் ஒரு பெரிய யேக்கியமான வியாபாரியைக் கூப்பிட்டு அல்லது சென்று இரகசியமாய் விசாரித்துக்கொண்டு, இரண்டையும் சரிபார்த்துத்தான் போடுவார்கள். இந்த காரியத்துக்கு ஏற்றபடி ‘பெரிய யோக்கியமான வியாபாரியாய்’ இருந்தவர் என் தகப்பனார். அவர் இருக்கும்போதே, சில சமயங்களில் நான் போய், அவர்களுக்கு வேண்டிய தகவல்கள் இது விஷயமாய் சொல்லுவேன். அவர்களுக்கு, நானே ‘பெரிய யோக்கியமான வியாபாரி’ யாகிவிட்டேன். அந்த இடத்திற்கு யார் வந்தாலும் முன்னவர் செய்தபடி என்னைத்தான் கேட்பார்கள். இந்த சங்கதி எங்கள் ஊர் கணக்கு மணியக்காரருக்குத் தெரியும். ஏன் என்றால், அவர்களும் அப்போது என் வயசுக்காரர்கள். எனது 2–ந்தர கூட்டங்களில் இலர்கள் கலந்தே இருப்பார்கள். ஆதலால், இவர்களுக்கும் என்னைக் கேட்டுத்தான் வியாபாரிகள் வரும்படி தெரிந்தாகவேண்டும். என்னைக் கேட்காவிட்டால், அதிகாரிகளிடம் நான் வேறு மாதிரியாய்ச் சொல்லிவிட்டால், இவர் சிபாரிசு கெட்டுப்போகும். வியாபாரிகளிடமும் இதற்கு ஆக இவர்கள் வாங்கிய மாமூல் பணம் திரும்பக் கொடுக்கவேண்டிவரும். ஆதலால், இவர்களும் என்னைக் கேட்டே இன்கம் டாக்ஸ் லிஸ்ட் தயார் செய்வார்கள். பிறகு,



RangaRakes tamilnavarasam.com

மெல்ல மெல்ல வர்த்தகர்களுக்கும் தெரியும்.

ஆதலால் கணக்கப்பிள்ளை (கர்ணம்) பட்டாமணியக்காரர், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் முதல் எல்லா அதிகாரிகளும் எனக்குத் தெரிந்தவர்கள் என்கின்ற காரணத்தினால், எல்லா வர்த்தகர்களும், கணக்கு மணியக்காரர்களும்கூட என்னிடம் வந்தே 'குறைந்த அளவுக்கு' சிபார்சு செய்து கொள்ளவேண்டியதாகி விட்டதால்; வருவார்கள்.

அடுத்தாற்போல் ஊரில் என்கரோச்மெண்ட் என்னும் நில ஆக்கிரமிப்பு என்கின்ற தொல்லை அதிகம். அப்போது இந்த சர்வேக்கள் வேலை முனிசிபாலிட்டிக்கு இல்லை; அதற்கும் கணக்கு மணியக்காரர்கள்தான் அதிகாரிகள். ஆதலால், அது சம்மந்தமான, இல்லாவிட்டால் கட்டடம் இடிபடும் சிபாரிசுக்கும் என்னிடம்தான் வருவார்கள். ஆஸ்பத்திரி டாக்டர்; எனக்கு வேண்டியவர்; குடும்ப சிநேகிதர்போல் இருப்பார். அந்த சிபாரிசுக்கு என்னிடம்தான் வருவார்கள். ஏனெனில் – ஆஸ்பத்திரி டாக்டர்கள் ஆங்கிலோ இந்தியர்கள். நான் ஹானரெரி மாஜிஸ்ட்ரேட்டாகவும் இருந்தேன். டிப்டி கலெக்டர் எனக்கு சிநேகமானதால்– மாஜிஸ்ட்ரேட் எந்த பெஞ்சு கேசுக்கும் என் அபிப்பிராயம்தான் கேட்பார். இதனால், பெஞ்சு கேசில் பட்டுக்கொண்டவர்களும் என்னிடம் வருவார்கள். நான் பெஞ்சில் முக்கிய வாயாடி; பெஞ்சு மாஜிஸ்ட்ரேட் ஆனதால், புண்ணுக்கழுத்து பிடிக்கிற எஸ்.பி.சி.ஏ. இன்ஸ்பெக்டர் என் கடையில் வந்து காத்திருப்பார். இதனால், செக்கு ஆட்டும் வாணியச் செட்டியார்கள் (ஈரோட்டில், அப்போது 150 செக்குபோல் ஓடும்) எனக்கு ரொம்பவும் வேண்டியவர்கள். ஒத்தவண்டி, குதிரை வண்டிக்காரர்கள் சிலர், இறங்கிக் கும்பிடுவார்கள். இப்போதைய இம்பீரியல் பாங்கிக்கு அப்போது 'மதறாஸ் பாங்கி' என்று பெயர். அந்த பாங்கி ஏஜெண்ட் ஒரு துரை. அவருடைய காஷ்கீப்பர் போட்ட மதிப்பு, அதாவது எந்தெந்த வியாபாரிக்கு எவ்வளவு கடன் கொடுக்கலாம், 3 மாதத்துக்கு ஒரு முறை அவர்கள் அந்தஸ்து எப்படி இருக்கிறது என்பதைப்பற்றிக் கேட்க என்னைக் கூப்பிடுவார். ஆதலால்,



RangaRakes tamilnavarasam.com

கேஷ்கீப்பர் எனக்கு வேண்டியவரானதால் வியாபாரிகளும் சிலர் எழுந்து வணங்குபவர்களாக இருப்பார்கள்; நான் ரீடிங்ரூம் செக்ரடரி, மகாஜன ஸ்கூல் செக்ரடரி, டென்னீஸ் கோர்ட் செக்ரடரி, தேவஸ்தான கமிட்டி பிரசிடென்ட் முகலிய பல உத்தியோகங்கள் எனக்கு உண்டு; இந்த நிலையில் முனிசிபல் தேர்தலுக்கு நிற்பவர்கள் என்னைக் கேட்காமல் எப்படி நிற்க முடியும்? நான் நினைத்தபடிதான் தேர்தல். அப்புறம் நானே 'நாய்க்கர்' (என் தகப்பனார்) ஆகிவிட்டேன். நான் போகாமல் எந்த வீட்டிலும் கல்யாணம் நிச்சயதார்த்தம் நடக்காது; நான் போகாமல் அநேக வீட்டில் ப்ரேதம் எடுக்கப்படமாட்டாது; எந்த கல்யாணத்தில் எந்த மேளத்தானை வைப்பது. எந்த தாசியை சதுருக்கு, பாட்டுக்கு வைப்பது என்பதும் என்னைக்கொண்டே செய்யும்படி ஆகிவிட்டதால், இந்தக் கூட்டமும் எனக்கு ரொம்பவும் வேண்டியவர்களாகவும் மிகவும் கீழ்ப்படிபவர்கள் ஆகவும் ஆகிவிட்டார்கள். கடைசியில், நானே முனிசிபல் சேர்மனும் ஆகிவிட்டேன்.

இதுவரை என் வியாபாரம் சிறிதாவது, அதாவது அக்காலத்தில் ஒரு வருஷத்துக்கு ஒரு 500 ரூபா இன்கம்டாக்ஸ் வரி கட்டுகிற அளவுக்கு நடந்தது; சேர்மென் ஆனதும், என் வியாபாரம் குறைந்தது. அப்போது எனது தானிய மண்டியில் வேலை பார்த்த ஆள் பணம் கையாடிவிட்டார். எனக்குச் சொந்தமான பஞ்சாலை ஜின்னிங் (பேக்டரி) எண்ணெய் செக்கு (ரோட்டரி) ஆகிய எந்திர சாலையில் வேலை செய்த ஏஜெண்ட், நான் சரியாய் வேலைகளை கவனித்து அவருக்கு தக்கது செய்வதில்லை என்று சொல்லி விலகிவிட்டார். நான் சிபாரிசு செய்து ஜாமீன் போட்டு கடன் வாங்கிக் கொடுத்த வியாபாரிகள் பணம் கட்ட முடியாமல் என்மீது குறை கூறும்படியான அளவுக்கு வாய்தாவில் டியூ கட்டாமல் தவறிவிட்டு விடுவார்கள்போல் தோன்றிற்று. உடனே, வியாபாரத்தைக்கூட கவனியாமல் விழுந்துபோன வியாபாரிகள் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டு அவர்கள் சொத்துக்களை விற்று அவர்களை மீட்டு விட்டு என் பஞ்சாலையை விற்றுவிட்டு, வியாபாரம் மாத்திரம் நன்றாய் ஏற்பாடு செய்துகொண்டு, சேர்மன் வேலையையும், ஊர் வேலையையும்

www.periyar.org.in



RangaRakes tamilnavarasam.com

செய்துகொண்டு நல்ல பிரபலமாய் இருந்து வருகிறேன்.

இந்த சந்தர்ப்பத்தில் சி. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் சேலம் சேர்மேன்; டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்கள் ஜஸ்டிஸ் கட்சிக்கு எதிர்ப்பாகவும், பெசண்ட் அம்மைக்கு எதிர்ப்பாகவும் (பெயர் ஞாபகமில்லை. ஏதோ ஒரு பெயருடன் திருப்பூரில்) ஒரு வாரப் பேப்பர் நடத்திக்கொண்டு சந்தா சேர்க்க ஈரோட்டுக்கு வந்தார். அவருக்கு ஈரோடு கடைவீதிகளில் பல சந்தா சேர்த்துக் கொடுத்து, வீட்டில் விருந்து செய்து, பெருமைப்படுத்தினேன்; என்றாலும், அப்போது நான் பெசண்ட் அம்மைக்கு வேண்டியவனாகவும், ஈரோடு பிரம்மஞான சபைக் கூட்டத்திற்கு மெம்பராகவும் இல்லாமல் இருந்தாலும் வக்கீல் எல்லாம் அதில் மெம்பரானதால், அவர் நட்புக்கு அடிக்கடி போய் வருபவனாகவும் இருந்தேன்; பெசண்ட் அம்மையை இன்டென்ட் செய்த காலத்தில் சர்க்காருக்கு விரோதமாக, அந்தம்மைக்கு அனுகூலமாக, பல காரியங்கள்கூட செய்துகொண்டு இருந்த சமயம்; ஏனெனில், எனக்கு அரசியலிலும் ஆசை இருந்தது. இண்டியன் பேட்ரியட் பத்திரிகை அடிக்கடி என்னைப்பற்றி புகழ்ந்து எழுதும்; ஆசிரியர் கருணாகரமேனனுக்கு என்மீது அன்பு உண்டு; அதில், அப்போது உதவி ஆசிரியராய் இருந்த ரங்கைய்யர் எனக்கு நல்ல பழக்கமுடையவர். இந்தக் கூட்டத்தில் இருந்த என்னை டாக்டர் வரதராஜுலு நாயுடுவின் சினேகமானது பெசண்ட் அம்மைக் கூட்டத்திலிருந்து பிரித்துவிட்டது. டாக்டர் வரதராஜுலு நாயுடுமீது மதுரையில் கேசு நடந்தபோது, சி. ராஜகோபாலாச்சாரியாரும், டாக்டர் நாயுடுவும் ஈரோடுக்கு வந்துதான், கேஸ் விசாரணைக்கு மதுரைக்குப் போவார்கள்; இதற்கு முன்பே எனக்கும், சி. ராஜகோபாலாச்சாரியாருக்கும் அவர் வக்கீல் என்கிற முறையில் பழக்கம் இருந்தது. சில ஆண்டு விழாக்களில் பேசியிருக்கிறோம். ஆச்சாரியார் முனிசிபல் சேர்மனானதால், நானும் சேர்மனாயிருந்ததால் ஈரோட்டு சேனிடேஷன், ரோட்டு நன்றாக இருப்பதாக ஈரோடுக்கு கேசுக்கு வரும்பொழுதெல்லாம் சொல்லி என்னைப் புகழுவார். "ஈரோடு, இயற்கையில் நல்ல சாக்கடை வசதியும்,



www.periyar.org.in

RangaRakes tamilnavarasam.com

ரொம்பவும் குறைந்த மைல் நீளமுள்ள ரோட்டமைப்பாகவும் அதிக பணவரும்படி உள்ள முனிசிபாலிடி ஆனதாலும், ஈரோடு உங்கள் கண்ணுக்கு அப்படித் தோன்றுகிறது'' என்று நான் சொன்னேன். இதைக் கேட்டு அவர் மகிழ்ச்சியடைந்து ''நாயக்கர் உண்மையிலேயே பெருமையை வெறுப்பவர் என்பதாக நன்றாய்த் தெரிகிறது'' என்று மேலும் புகழ்ந்தார். ''இவ்வளவு சாமர்த்தியம் இருப்பதால்தான், தாங்கள் கெட்டிக்கார வக்கீலாக இருக்கிறீர்கள்''என்றேன்; கூட இருந்தவர்கள் சிரித்தார்கள்; எங்களுக்குள் அன்பு ஏற்பட்டது; இந்த அன்பு இருக்கும்போது, ஆச்சாரியார், டாக்டர் நாயுடு கேசு விஷயமாக செல்லுகையில் நம்மவீட்டிற்கு நாயுடு உடன் வந்தபோது, 'நாயுடு கேசுக்கு வக்கீலாக வருகிறார்; பீசு இல்லாமல் பேசுகிறார்' என்ற காரணத்தால் ஆச்சாரியாரிடம் எனக்கு அதிக அன்பு. நெருங்கிய தொடர்புகொண்டு பெசண்டம்மைக்கு விரோதமாக வேலை செய்தேன். நாயுடு ஸ்நேகம் காரணமாக நான் அந்த தொண்டில் இழுக்கப்பட்டேன். அவர்கள் கூப்பிடும் கூட்டங்கட்கெல்லாம் செல்ல ஆரம்பித்தேன். இதற்கு மத்தியில், ஜஸ்டிஸ் கட்சிக்கு விரோதமாக, 'சென்னை மாகாண சங்கம்' என்ற பெயரால், பார்ப்பனரல்லாதாருக்கென்றே ஒரு சங்கம் துவங்கி வேலை செய்துவந்தது. அந்த ''மெட்ராஸ் பிரசிடென்ஸி அஸோஸியேஷன்'' என்ற சங்கத்துக்கு கேசவபிள்ளை தலைவர், லாட். கோவிந்ததாஸ், சல்லா குருசாமி செட்டியார், நாகை வி. பக்கிரிசாமிபிள்ளை, (காயாரோகணம் அவர்கள் தகப்பனார்) நான் ஆகியவர்கள் உபதலைவர்கள். டாக்டர் நாயுடு, திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்களும் கார்யதரிசிகள் என்பது எனது ஞாபகம். அதில், நான் அதிக பங்கெடுத்துக்கொண்டேன். பத்திரிகைக்கு 1000 ரூபா கொடுத்தேன். 1000 ரூபாயுக்கு மேல் செலவு செய்து ஈரோட்டில் நான் வரவேற்புக் கழக தலைவனாக இருந்து லாட். கோவிந்ததாஸ் தலைமையில் ஒரு மகாநாடு நடத்தினேன். அதில் தமிழ்நாடு பிரபலஸ்தர்களும், தொண்டர்களும், முக்கியமான காங்கிரஸ் தலைவர்களும் அறிமுகமானார்கள். விஜயராகவாச்சாரியார், சி. இராஜகோபாலாச்சாரியார், டாக்டர் ராஜன், சீரங்கம் கொடியாலம்



RangaRakes tamilnavarasam.com

வாசுதேவ அய்யங்கார் பிள்ளை, கே.வி. ரங்கசாமி அய்யங்கார் முதலிய பார்ப்பன பிரமுகர்களும் மற்றும் எனக்கு முன்பு சாதாரண வியாபாரி என்கின்ற முறையில் அறிமுகமாகியிருந்தார்கள். பலரும் அரசியலிலும் சினேகமானார்கள். ஆனதால், பல வெளியூர் வியாபாரிகளும் சிதம்பரம் பிள்ளை, கல்யாணசுந்தர முதலியார், ஆதி நாராயண செட்டியார் முதலியவர்களும் அப்பொழுது முதல் அதிக சினேகிதர்கள் ஆனார்கள். அந்த மகாநாட்டில் 100–க்கு 50–க்குக் குறையாமல் பார்ப்பனரல்லா தாருக்கு உத்தியோகப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவேண்டும் என்று தீர்மானம் செய்யப்பட்டது. இதன் பயனாய் அரசியல் சம்பந்தமான எல்லாக் கூட்டங்களுக்கும், மகாநாடுகளுக்கும் நான் அழைக்கப்பட்டேன். நானும் ஈரோட்டிலிருந்து பெரும் கூட்டத்தோடு ஒவ்வொரு மகாநாட்டுக்கும் சென்றுவந்தேன். எனக்கு, என் தொழிலைவிட இதில் அதிக பற்று உணர்ச்சி ஏற்பட்டுவிட்டது. இந்த சந்தர்ப்பத்தில் ராஜகோபாலாச்சாரியார் சேலம் விட்டு, சென்னைக்கு போய்விட நினைத்தார். தன்னுடன் இருந்து, வேலை செய்ய என்னையும் அழைத்தார். தான் சேலம் சேர்மன் வேலையை விட்டுவிடுவதாகச் சொன்னார். டாக்டர் நாயுடு என்னையும் சேர்மன் வேலையை விட்டுவிட்டு தங்களோடு கலந்து அரசியல் காரியமே செய்யலாம் என்றார். மூவரும் கலந்து பேசியதில் எனக்கு துணிவு ஏற்பட்டு நானும் சம்மதித்துவிட்டேன். சர்க்கார் நடத்தையைக் கண்டித்து சேர்மன், தாலுகா போர்ட் பிரசிடெண்ட், ஜில்லா போர்ட் மெம்பர், யுத்தக் கமிட்டி கார்யதரிசி, ஹானரரி ரிக்ரூடிங் ஆபீசர் முதலிய பல கவுரவ வேலைகளை ஒரே காகிதத்தில் ராஜினாமா கொடுத்தேன். இது நடந்து பத்திரிகையில் வெளிவந்தவுடன் ''சுதேசமித்திரன்'', ''ஹிந்து'' இரண்டும் தலையங்கம் எழுதி என்னைப் புகழ்ந்து பிரமாதப்படுத்திவிட்டன. இதைப் பார்த்து அப்பொழுது சென்னை சர்க்கார் லோகல் முனிசிபல் டிபார்ட்மெண்ட் இலாகா நிர்வாகச் சபை மெம்பரான சர்.பி. ராஜகோபாலாச்சாரியார், தன்னை ஈரோடு ரயில்வே ஸ்டேஷனில் வந்து, அடுத்த நாள் காலையில் சந்திக்கும்படி சென்னையிலிருந்து தந்தியனுப்பினார். அப்போது,அவரை ரயிலில் போய் பார்த்தேன். பக்கத்தில் அவரது மலையாள மனைவி



RangaRakes tamilnavarasam.com

இருந்தார்; அந்த அம்மையாரிடம் அடிக்கடி என்னைப்பற்றி அவர் பேசுவது வழக்கம். அந்த அம்மையாரும், என்னிடம் அன்பாய்ப் பேசுவார்கள். அப்போதைக்கு, சுமார் இரண்டு மாதத்திற்குமுன், ஈரோட்டில் நான் சேர்மனாக இருந்து, 'தண்ணீர்க் குழாய் துவக்க விழா' நடந்தபோது, அதை நடத்த பி. ராஜகோபாலாச்சாரியாரை அழைத்ததற்கு, அவர் மனைவியுடன் வந்து துவக்க விழா நடத்தினபோது, என்னைப் பற்றி மிகமிகப் புகழ்ந்து பேசியதை அந்தம்மையும் கேட்டுக்கொண்டிருந்தார், ஆதலால், அந்தம்மையிடம் நான் சேர்மன் பதவியை ராஜினாமா கொடுத்துவிட்டதாக இவர் சென்ன உடன், அந்தம்மையார் வருத்தப்பட்டு என்னை ராஜினாமாவை வாபஸ் வாங்கிக் கொள்ளும்படி செய்வதாக இந்தம்மையார் கணவனுக்கு சொல்லியிருக்கிறார். இதை அனுசரித்து, அந்தம்மையார் என்னைக் கண்டதும் அன்பாய் வரவேற்று, தனக்குப் பக்கத்தில் உட்காரச் சொன்னார்; நான் உட்கார்ந்தேன். உடனே அவர் கணவர் வண்டியை விட்டுக் கீழே இறங்கி, பிளாட்பாரத்தில் நின்றுகொண்டார். அம்மையார் "நாயக்கரே, நீங்கள் ராஜினாமா கொடுத்துவிட்டீர்களாம். நிஜமா?" என்றார். நான் "ஆம்" என்றேன். "அது சரியல்ல; எங்கள் அய்யர் உங்களுக்கு ராவ் சாகிப் பட்டம் சிபார்சு பண்ணியிருக்கிறார்; அய்யருக்கு அவமானமாய் விடும். அய்யர் ரொம்பவும் வருத்தப்படுகிறார். உங்களுக்கு, மேலும் ஏதோ உத்தியோகம் கொடுக்கவேணும் என்று யோசித்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் கண்டவங்க பேச்சைக் கேட்டு அப்படிச் செய்யாதீர்கள். அதை வாபஸ் வாங்கிக் கொள்ளுங்கள்" என்றார். " செய்துபோட்டேனே அம்மா, இனி, வாபஸ் வாங்கினால் எனக்கு அவமானம். ஆபீஸிலும் நான் எல்லோரிடமும் சொல்லிவிட்டேன். ஊரிலும் கலெக்டர் முதல் கேட்டும் 'மாட்டேன்' என்று சொல்லிவிட்டேன். இனி, எப்படி வாபஸ் வாங்குவது? மன்னிக்கவேண்டும்." என்று கெஞ்சினேன். அய்யர் (சர்.பி. ராஜகோபாலாச்சாரியார்) இதை ஜாடையாகப் பார்த்துக்கொண்டிருந்தார். 'முடியவில்லை' என்று அறிந்து, வந்து, வண்டிக்குள் ஏறினார். நான் எழுந்து நின்றேன். என் கையைப் பிடித்து



RangaRakes tamilnavarasam.com

“சிட்டவுன் மை பாய் (உட்காரு என் மகனே)” என்று உட்கார வைத்து, “நீ அப்படிச் செய்யாதே. உனக்கு பாலிடிக்ஸ் தெரியாது. உனக்கு அது தகுதியல்ல. நீ நல்ல வியாபாரி; உனக்கு வேண்டிய பெருமை ஏராளமாக இருக்கிறது . . . அதற்கு ஏன் போகிறாய்? . . . கவர்ன்மெண்டில், உன் மீது நல்ல அபிப்ராயம். கலெக்டரும் உன்னைப்பற்றி, நிறையச் சிபாரிசு செய்திருக்கிறார். என் பேச்சைக் கேள். நான் உன் தகப்பனார் – உங்கய்யா, எனக்குத் தெரிந்தவர். நான் உங்கள் ஊரில் சப்–கலெக்டராக இருந்தேன். என்ன சொல்கிறாய்? என்னிடமே ஒரு கடிதம் எழுதிக்கொடு . . . ‘நான் ராஜினாமாவை வாபசு வாங்கிக் கொண்டேன்” என்று சொல்லி, ஒரு கடிதத்தைக் கொடுத்தார். நான் “மன்னிக்கவேண்டும். ஊரிலேயே குடி – இருக்கமுடியாது. யார் யாரோ சொல்லி முடியாது என்று சொல்லிவிட்டேன்” என்றேன். “என்ன மகாப்பிரமாதமாய் பேசுகிறாய். பண்டித மதன் மோகன் மாளவியாவே தான் கொடுத்த ராஜினாமாவை வாபஸ் வாங்கிக்கொண்டார். போன வராத்தில்; நீ என்ன பிடிவாதம் செய்கிறாய்?” என்றார்; நான் மறுபடியும் “மன்னிக்கவேண்டும்” என்று கைகூப்பி கும்பிட்டேன்; “நீ தவறு செய்கிறாய்; பொது ஜனங்களுக்கும் துரோகம் செய்கிறாய். உனக்கும் விரோதம் செய்து கொள்ளுகிறாய். உன் இஷ்டம் போ” என்று சொல்லி என்னை அனுப்பிவிட்டார். ரயில் புறப்பட்டுவிட்டது. இதற்குப் பிறகு ஊரில் எனக்கு இன்னமும் அதிக பெருமை ஏற்பட்டுவிட்டது. இரண்டு மூன்று நாளில் ஈரோட்டுக்கு வந்த சி.ஆரிடமும், டாக்டர் நாயுடுவிடமும் இதைச் சொன்னேன். அவர்களுக்கு என்னைப்பற்றி, மிகப் பெரிய எண்ணம் ஏற்பட்டுவிட்டது. ஒரு நல்ல ஆள் அவர்களுக்குக் கிடைத்ததாகக் கருதிக்கொண்டு என்னிடம் அதிக மரியாதை காட்டினார்கள்.

சி.ஆர். அவர்கள், என்னை சென்னைக்கு வந்துவிடும்படி அழைத்தார். தான் வாடகைக்கு வாங்கிக் குடியிருக்கும் பங்களாவில், ஒரு பாகம் இடம் காலியாய் இருப்பதாகவும், மனைவியுடன் வரும்படியும் அழைத்தார். டாக்டர் நாயுடு, என்னை சென்னைக்குப்



RangaRakes tamilnavarasam.com

போகவேண்டாமென்றும், இஷ்டப்பட்டால் சேலத்துக்கு வந்து தன்னுடன் ஒன்றாக குடும்பத்துடனே இருக்கலாம் என்றும்அழைத்தார். எனக்கு எங்காவது போய்விடலாம்; ஈரோட்டில் இருக்கவேண்டாம் என்றே தோன்றிற்று. ஆனால், ஈரோட்டு வியாபாரிகள், "நீங்கள் எங்கும் போகக்கூடாது, ஈரோட்டில் இருந்துகொண்டே எங்கு வேண்டுமானாலும் போங்கள்; நீங்கள் போய்விட்டால் ஊருக்கு மதிப்பு கெட்டுப்போகும்" என்றார்கள். என் மனைவிக்கு இவர்கள் வருவதும், போவதும் நான் வேலையை ராஜினாமா கொடுத்தும், சர்க்கார் 'மெம்பர் டைடில்' கொடுப்பதாகச் சொல்லியும் நான் ஒப்புக்கொள்ளாததும், ஊரையும், வீடு வாசலையும், மாடுகளையும் விட்டுவிட்டு வெளியூருக்கு ஒண்டிக்குடியாய்ப் போவதும் சிறிதும் பிடிக்கவில்லை.

"உனக்கு என்ன பயித்தியமா, நம்ம நிலை என்ன? சங்கதி என்ன? ஆளு அம்பு வாழ்க்கை என்ன? இவைகளை, திடீரென்று விட்டுவிட்டு யாரிடம் ஒப்புவித்துவிட்டுப் போவது? நீ வேண்டுமானால் போ; நான் வெளியூருக்குப் போய் ஒண்டிக்குடியாய் இருக்க முடியாது" என்று சொன்னார்கள். நான் "சரி, எங்கும் போகவில்லை இங்கேயே இருக்கிறேன். நீ மாத்திரம், நான் சொல்லுகிறபடி நடக்கவேண்டும்" என்றேன். 'சரி' என்று ஒப்புக்கொண்டார்கள். மகாநாடுகளுக்கும், காங்கிரஸ் மகாநாட்டுக்கும் நான் ஈரோட்டிலிருந்து பெருங்கூட்டத்துடன் செல்வேன். மகாநாடுகளில் எனக்குத் தனி மரியாதை இருக்கும். இந்த நிலையில், சென்னையில் இருப்பவர்களிடமிருந்து அரசியல் ஆதிக்கத்தைக் கைப்பற்றவேண்டும் என்பதாகக் கருத்துகொண்டு, ஒரு இரகசியக் கூட்டத்தை சீரங்கத்தில் சி.ஆர். கூட்டினார். அதில் சேலம் விஜயராகவாச் சாரியார், சி. ராஜகோபாலாச்சாரியார், டாக்டர். டி.எஸ்.எஸ். ராஜன், ஆதி நாராயண செட்டியார், ஜார்ஜ்ஜோஸப், டாக்டர் நாயுடு, நான் ஆகியவர்களே முக்கியமாய்க் கூடிப் பேசினோம். அதில் முக்கியமாகப் பேசினது "பெசண்டம்மையார் ஆதிக்கத்தை

www.periyar.org.in



RangaRakes tamilnavarasam.com

ஒழிப்பதுதான்'' இதற்கு ஒரு கமிட்டி நியமித்து, பண வசூல் செய்வது; ஊர் ஊராய் சென்று பிரச்சாரம் செய்வது ஆகியவை நோக்கம். பிரச்சாரத் திட்டம் என்னவென்றால், 'பெசண்ட் அம்மை எங்கள் பிரதிநிதி அல்ல, அந்த அம்மாள் அபிப்பிராயம், இந்த நாட்டு மக்கள் அபிப்ராயமல்ல' என்று உலகறியச் செய்யவேண்டும் என்பவையாகும். இதைச் செய்யச் சொன்ன கஸ்தூரி ரங்க அய்யங்கார் கூட்டம் இதில் ஒட்டிக்கொள்ள தைரியம் இல்லை. அது மாத்திரமல்லாமல், சி.ஆர். முன்னுக்கு வருவதும், அப்போது அவர்களுக்கு பொறாமையாய் இருந்தது. இதை அறிந்து சி.ஆர். ஒரு தனிக்கட்சி – மாகாணத்துக்கே ஏற்படுத்த முயற்சித்தார்; அதற்கும் நாங்கள் சம்மதித்தோம்; திரு.வி.க. அவர்களும் இதில் முக்கிய பங்குகொண்டார். உடனே, சென்னை சவுந்தர்ய மகாலில் அது நடக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்குப் பெயர் ''மெட்ராஸ் நேஷனலிஸ்ட் அஸோஸியேஷன்.'' அது கஸ்தூரி ரங்க அய்யங்கார் கூட்டம் இதில் கலந்துகொண்டதற்குக் காரணம் – நான், டாக்டர் நாயுடு, திரு.வி.க. மூவரும் இதில் கலந்ததால் பார்ப்பனரல்லாதாரிடம் உள்ள செல்வாக்கு, தங்களுக்குப் போய்விடுமே என்ற பயம்தான். மற்றும் ஆந்திரா, மலையாளம், தமிழ் ஆகிய எல்லா நாடுகளிலிருந்தும் பிரதிநிதிகள் வந்தார்கள். இது பெரிய பிரபல மகாநாடாக ஆகிவிட்டது. வி.ஓ. சிதம்பரம்பிள்ளை, தண்டபாணிப் பிள்ளை ஆகியவர்களும் கலந்துகொண்டார்கள். அது பல தீர்மானங்கள் செய்தது. அதில் 100–க்கு 30 ஸ்தானங்களுக்குக் குறைவில்லாமல் பார்ப்பனரல்லாதார் களுக்கு உத்தியோகம், பிரதிநிதித்துவம் எல்லாம் கொடுப்பது என்பதாக ஒரு தீர்மானம் செய்தது. இதற்கு முக்கியக் காரணம் நானேயாகும். டாக்டர் நாயுடுவும், திரு.வி.க.வும் உத்தியோக விகிதாச்சாரத்துக்கும் வகுப்பு உணர்ச்சிக்கும் அப்போது எதிர்ப்பானவர்கள். நான் ஒவ்வொன்றுக்கும் வகுப்பு வீதம் கேட்பவன். அதனால், எனக்காக அதைச் செய்தார்கள். அந்த

www.periyar.org.in



RangaRakes tamilnavarasam.com

மகாநாட்டுக்கு நான்கு காரியதரிசிகள், சி.ஆர். பிரதம காரியதரிசி, நான், டி. பிரகாசம், கே.பி. கேசவமேனன் மூவர் முறையே தமிழ், ஆந்திரம், கேரளம் ஆகிய மூன்று நாட்டுக்கு காரியதரிசிகள். விஜயராகவாச்சாரியார் தலைவர், கஸ்தூரி ரங்க அய்யங்கார், சிதம்பரம் பிள்ளை உபதலைவர்கள்.

இந்த இடத்தில் ஒரு முக்கிய சங்கதி; என் ஞாபகத்துக்கு வருகிறது. அதாவது 'மதராஸ் நேஷனலிஸ்ட் அசோசியேஷனுக்கு' சி. விஜயராகவாச்சாரியாரை தலைவராக பிரேரேபித்து மக்கள் ஒப்புக்கொண்ட உடன், சி. கஸ்தூரிரங்க அய்யங்கார் அவர்களை உபதலைவராக சி. ராஜகோபாலாச் சாரியார் பிரேரேபித்தார். உடனே வி.ஓ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் பெயரையும் நான் பிரேரேபித்து, இரண்டு உபதலைவர் இருக்கவேண்டும் என்று சொன்னேன். என். தண்டபாணிபிள்ளை இதை ஆமோதித்தார். கஸ்தூரிரங்க அய்யங்காருக்கு இது பிடிக்கவில்லை. சி.ஆர். அவர்கள் 'ஒரே உபதலைவர் போதும்' என்றார். இது வாதத்துக்கு இடமாய்விட்டதுடன், வி.ஓ. சிதம்பரம் பிள்ளைக்கு இந்த மரியாதை கொடுப்பது கஸ்தூரிரங்க அய்யங்கார் கூட்டத்திற்கும் மற்றும் சில பார்ப்பனர்களுக்கும் பிடிக்கவில்லை என்று அக்கூட்டத்தில் உள்ள பல பார்ப்பனரல்லாத மக்கள் உள்ளத்தில் பட்டுவிட்டது; சி.ஆர். ஆச்சாரியார் இதை சமாளிக்க என்னென்னமோ செய்து பார்த்தார். அவர் சாமர்த்தியம், கூட்டத்தில் பலமான பிளவு ஏற்படும்படி செய்துவிட்டது. உடனே, கூட்டத்தை ஒத்திவைத்து மாலைக் கூட்டத்தில் முடிவு செய்துகொள்ளலாம் என்று தள்ளி வைக்கப்பட்டுவிட்டது. நானும், டாக்டர் வரதராஜுலு நாயுடுவும், திரு.வி.க. அவர்களும், ராஜகோபாலாச்சாரியாரும் ஒரே காரில் ஏறி ஜாகைக்கு வரும்போது வழியில் ஆச்சாரியார் – உபதலைவர் நியமன சம்பவத்துக்கு சமாதானம் சொல்லும் முறையில், எங்களைப் பார்த்து,

"இன்றைய நடவடிக்கை, ஜஸ்டிஸ் கட்சியாரே மேலானவர்கள் என்று கருதும்படியாக ஆகிவிட்டதே" என்று சொன்னார். அதற்கு நாங்கள் ஒருவரை ஒருவர் பார்த்து ஜாடை செய்துகொண்டதோடு நான் ஆச்சாரியாரைப் பார்த்து "தலைவர் விஜயராகவாச்சாரியார், உபதலைவர் கஸ்தூரிரங்க அய்யங்கார். தாங்கள் தலைமை காரியதரிசி இப்படி இருக்கும்போது ஒரு தமிழர் உபதலைவர்களில் ஒருவராகக் கூட இருக்க தங்களுக்கு இஷ்டமில்லை என்பதாக மக்கள் நினைக்கும்படியாக ஏற்பட்டுவிட்டதால்தான் சிலர் அந்தப்படி கிளர்ச்சி செய்தார்களே ஒழிய, மற்றபடி வேறு காரணம் ஒன்றுமில்லை" என்று நான் சமாதானம் சொன்னேன்; ஆச்சாரியார் பேசவில்லை; மாலைக் கூட்டத்தில் ஒரே உபதலைவர் போதும் என்கின்ற பிரேரேபனைக்கு கஸ்தூரிரங்க அய்யங்கார் கட்சி ஓட்டு சேகரிப்பதாக சேதி தண்டபாணி பிள்ளையால் தெரிந்தது. ஆந்திரா, மலையாள பிரதிநிதிகள் எனது பிரேரேபனைக்கு எதிராக ஓட்டு செய்வார்கள் என்பதாகவும் தெரியவந்தது. உடனே நான் 50 ரூ. எடுத்து தண்டபாணிபிள்ளை அவர்களிடம் கொடுத்து 100 டெலிகேட் டிக்கெட் வாங்கி 100 தொழிலாளர் தோழர்களை அழைத்துவரும்படி செய்துவிட்டோம். மாலைக் கூட்டம் சௌந்தர்ய மகாலில் கூடிற்று; தொழிலாளர்கள் 100 பேர் வந்து உட்கார்ந்துவிட்டார்கள்; என் பிரேரேபனை ஜெயித்து விடும் என்று அய்யங்கார் கோஷ்டி தெரிந்துகொண்டது. இந்த சமயத்தில் ஆச்சாரியார் ஒரு தந்திரம் செய்து ஒரு சமாதான தீர்மானம் கொண்டுவந்தார். அது என்னவென்றால், 4 உபதலைவர்கள் – அதில் வி.ஓ.சி. உள்பட சத்தியமூர்த்தி அய்யரும் ஒருவர் – என்பதாக பிரேரேபித்தார்; நான் ஒப்புக்கொண்டேன்; மற்ற தோழர்கள் அதாவது டாக்டர் நாயுடு, திரு.வி.க., தண்டபாணிப்பிள்ளை ஆகியவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. இவர்கள், ஒப்புக்கொள்ளாததால் 4 உபதலைவர்கள் தீர்மானம் தோல்வியுறும் போலாகிவிட்டது; பிறகு, ஓட்டுக்கு விடாமலேயே எனது பிரேரேபணை ஒப்புக்கொள்ளப்பட்டு



www.periyar.org.in

கஸ்தூரி ரங்க அய்யங்காரும், வி.ஓ. சிதம்பரம் பிள்ளையும் உபதலைவர்களானார்கள். சத்தியமூர்த்தி அய்யருக்கும், ஏ. ரெங்கசாமி அய்யங்கா ருக்கும் அந்த கமிட்டியில் மெம்பர் பதவிகூட கிடைக்கவில்லை. டாக்டர் நாயுடு, டி.எஸ்.எஸ். ராஜன், திரு.வி.க. ஆகியோரும் மற்றும் பலரும் முக்கிய மெம்பர்கள். இதன் பயனாய் சென்னையில் மாகாணத்துக்கே தலைவர்களாக இருந்துவந்த ரங்கசாமி அய்யங்கார் கோஷ்டிக்கும், பெசண்ட் கோஷ்டிக்கும், ராஜகோபாலாச்சாரியார் கோஷ்டியாக இருந்த எங்கள்மீது பொறாமை ஏற்பட்டது. நாங்கள் மூவரும் அதாவது நான், ஆச்சாரியார், நாயுடு ஆகிய மூவரும் அதிக நண்பர்களாகிவிட்டோம். எங்களுக்கு விரோதமாய் கஸ்தூரிரங்க அய்யங்காரும், ரெங்கசாமி அய்யங்காரும் தங்கள் பத்திரிகைகளில் ஜாடையாகவும், சத்திய மூர்த்தி அய்யரைக் கொண்டு வெளியிடங்களில் வெளிப்படையாகவும் எதிர்ப் பிரச்சாரம் செய்யச் செய்தார்கள். நாங்கள் ஆச்சாரியாரை கண்ணை மூடிக்கொண்டு ஆதரித்ததால் அவர்கள் செல்வாக்கு குறைய ஆரம்பித்தது. அநேக பார்ப்பனர்களும் எங்களை ஆதரிக்க முன்வந்துவிட்டார்கள். இந்தக் காலத்தில்தான் காந்தியார் அரசியலில் விளம்பரமாகினார். இவருக்கு சி.ஆர். மிக்க உதவி; பஞ்சாப் படுகொலை நடந்த சமயம்; அதன் பயனாய் நாடெங்கும் ஆத்திரம் பொங்கி எழுந்த காலம். பஞ்சாப் படுகொலையைக் கண்டித்து, எங்கும் கண்டனக்கூட்டம். இந்த வருஷம் 1919 என்பது ஞாபகம். இந்த டிசம்பரில் மோதிலால் நேரு தலைமையில் அமிர்தசரசில் காங்கிரஸ் மகாநாடு ஏற்பாடாகியிருந்தது. இந்த காங்கிரஸ் மகாநாடு பிரபல காங்கிரசாகிவிட்டது. நானும் ஆச்சாரியாரும் இந்துமித்திரன் கூட்டமும் ஏராளமான மக்களும் சென்றிருந்தோம். அங்கு சென்று நேரில் அந்த படுகொலை சம்பவங்களைப் பார்த்த பிறகு எனக்கு மிகுந்த ஆத்திரம் வந்தது. நான் தீவிர தேசியவாதியாகிவிட்டேன்.



RangaRakes tamilnavarasam.com

“நீங்கள் எந்தப் புத்தகத்தைப் படித்தால்தான் என்ன பயன்? படிப்பது என்பது அறிவு உண்டாவதற்கு. ஆனால், நீங்கள் படிக்கும் புத்தகம் எல்லாம் மடமை வளர்ச்சிக்கும் மூட நம்பிக்கை ஏற்படவும் பயன்படுகிறது. அதனால்தான் இன்றும் நம் மக்கள் (1962–ல் எழுதியது) பகுத்தறிவற்றிருக்கிறார்கள்.

நீங்கள் குடிஅரசு, பகுத்தறிவு பதிப்பக புத்தகம் வாங்கிப் படித்தால் கட்டாயம் பகுத்தறிவுவாதி யாவீர்கள். இந்த புத்தகங்கள் மதம், சாதி, நம் அரசியல் முதலிய துறைகளில் அவற்றில் உள்ள புரட்டுக்களை விளக்கி உங்களை பகுத்தறிவுவாதி களாக்கும்.

விலை மிக மிக மலிவுக்கு பொது நலத்தை முன்னிட்டே நட்டத்திற்கு பதிப்பிக்கப் படுகிறது.”

– ஈ.வெ.ரா. (1962–இல்) எழுதியது



RangaRakes tamilnavarasam.com